1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) 1971-72, 1972-73 ஆண்டுகளில் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை மூலம் உதவித் தொகை வழங்குவது சம்பந்தமாக அறிவிப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் முக்கியமாக தமிழ் ஆங்கிலம் தினசரிகளிலும் தமிழரசு தமிழ் ஆங்கில இருவார இதழிலும் அறிவிக்கப்பட்டன.

1971-72-ம் ஆண்டில் அரிசன நலத்துறை இயக்குநரால் பத்திரிகைகளில் விளம்பரம் எதுவும் செய்யப்படவில்லை. நடப்பு ஆண்டில் முக்கியமான பத்திரிகைகளான இந்து, மெயில், தினத்தந்தி, தினமணி, தென்னகம், முரசொலி மூலமாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அகில இந்திய ரேடியோ மூலமும் அறிவிக்கப்பட்டது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, கடந்த சில ஆண்டுகளாக அந்த விளம்பரம் கெஜட்டில் வெளியிடப்படாததற்குக் காரணம் என்ன? தாங்கள் உதவிப் பணம் பெறத் தகுதி பெற்றவர்களா என்பதை அவர்கள் அறிய அரசு என்ன வழிவகை செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இது வழக்கமாக பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது. 1971–72-ல் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 1972–73-ல் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழரசு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகிறது.

மின்சார வாரியம் உபயோகப்படுத்தும் கம்பங்கள்

*190 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

மின்வாரியத்தில் தற்போது பயன்படுத்தப்படும் "காங்கிரீட் கம்பங்களுக்குப் பதிலாக இரும்புத் தண்டவாளங்களை பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த கான்கிரீட் கம்பங்களுக்குப் பதிலாக இரும்பு தண்டவாளங்களை உபயோகிப்பது நீண்ட காலத்திற்குப் பயன்படும் என்று கருதப்படுவதாலும், அதை விடச் சிக்கனமாக இருக்கும் என்று சொல்லப்படுவதாலும், இரும்புத் தண்டவாளங்களை உபயோகிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அது சிக்கனம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்வி

பேரவைத் துணைத் தலைவர், பேரவைச் செயலாளர் ஆகியோர் பற்றி உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது குறித்து.

Dr. H. V. HANDE : On a point of Order, Sir, if the Hon. Deputy Speaker remembers right some time ago the Deputy Speaker had announced in this House that under Article 212 of the Constitition he would seek immunity and not appear before the High Court to give evidence. But now a stricture has been passed by the High Court against the Deputy Speaker (voices of No. No from the Government side). I shall read from the judgment :—

" But when events in a particular situation compelled him to assist the Court by affording such material, which was exclusively to his knowledge, it would be in the best interests of society at large and the Government in particular, to render such assistance. Unfortunately this had not been done ".

Let me read the other things also.

" We are constrained to point out that the Deputy Speaker claimed privilege that he would not submit himself to the jurisdiction of this Court. Yet, as the person who had been piloting the affairs of the legislature on that day, he could have certainly given the best of assistance to the Court with some hypothesis of material on the facts of the case.